மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட முத்துசாமி பூங்கா, பத்மநாபா தியேட்டர் சமீபம் மற்றும் கச்சேரி காம்பவுண்ட் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடங்கள் சிதிலமடைந்துள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது மேலும், 36ஆண்டுகள் முந்தைய ஏ.சி தகடு கூரையினால் அமைக்கப்பட்டுள்ள மேற்கண்ட அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த மன்றத் தீர்மானம் நிறைவேற்றி மேல் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவே, சிதிலமடைந்து மேற்படி அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழ<u>ங்கப்பட்டது</u>

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் 05.01.2022 அன்று வருவாய் கோட்டாசியர், காந்தி ரோடு, காந்தி சிலை, ஹரிஹரநதி மயானம் மற்றும் வாஞ்சிநாதன் மணி மண்டம் ஆகியவை ஆய்வு செய்ததில் காந்தி சிலைக்கு விழக்காலாங்களில் மலர் மாலை அணிவிப்பதற்கு தகுந்தாற்போல் ஏணி மற்றும் மேடை அமைக்க தெரிவித்துள்ளார்கள் எனவே, காந்தி சிலையினை சுற்றி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடம் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதிக்கப்பட்டது

<u>மன்றப்பொருள்</u>

நடைபெற இருக்கும் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2021 க்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் ஆல்பா கம்ப்யூட்டர்ஸ், சங்கரன்கோவில் என்ற நிறுவனம் மூலமாக 100 பிரதிகள் அச்சு செய்து அதில் 10 பிரதிகளை மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தென்காசி அலுவலகத்தில் செய்ய வேண்டி உள்ளதால், மீதம் உள்ள புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களை இந்நகராட்சியின் மூலம் போட்டியிடும் மற்றும் விருப்பம் உள்ள பொது மக்களுக்கு விற்பனை செய்திட ஏதுவாக அச்சுப் ணி மேற்கொண்டமைக்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் : 585/ 2021/ எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. நடைபெற இருக்கும் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2021 க்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் ஆல்பா கம்ப்யூட்டர்ஸ், சங்கரன்கோவில் என்ற நிறுவனம் மூலமாக 100 பிரதிகள் அச்சு செய்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

<u>மன்றப் பொருள்</u>

இந்நகராட்சியில் பணியாற்றி வரும் ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு பொங்கல் பண்டிகைக்கு முன்பாக சீருடைகள் வழங்கிட வேண்டி உள்ளதால், கோ ஆப் டெக்ஸ், திருநெல்வேலி அரசு நிறுவனத்தின் மூலம் கீழ்கண்டவாறு சீருடைகள் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.23840 தொகையினை கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**I. காக்கி கலர் பேண்ட் துணி விபரம் :-**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | துாய்மை பணியாளர்கள் ஆண்கள் (1.30 மீx2 ) | 13 | 2.60 | 33.80 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆண்கள் (1.30 மீx2) | 03 | 2.60 | 07.80 |
| 3 | ஓட்டுநர்கள் ஆண்கள் (1.30 மீx2) | 03 | 2.60 | 07.80 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | 49.40 |

**II. காக்கி சட்டை துணி விபரம் :-**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | துாய்மை பணியாளர்கள் ஆண்கள் (1.75 மீx2 ) | 13 | 3.50 | 45.50 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆண்கள் (1.75 மீx2) | 03 | 3.50 | 10.50 |
| 3 | ஓட்டுநர்கள் ஆண்கள் (1.75 மீx2) | 03 | 3.50 | 10.50 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | 66.50 |

**III. சேலை :-**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | துாய்மை பணியாளர்கள் பெண்கள் | 2 | 2 | 4 |
| 2 | அலுவலக உதவியாளர் பெண் | 1 | 2 | 2 |

| | |
|---|---|
| மொத்த எண்ணிக்கை | 6 |

**IV. ரவிக்கை :-**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | துாய்மை பணியாளர்கள் பெண்கள் (0.80 மீX2 ) | 2 | 1.60 | 3.20 |
| 2 | அலுவலக உதவியாளர் பெண் (0.80 மீX2 ) | 1 | 1.60 | 1.60 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | 4.80 |

**V. தலைப்பாகை :-**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | துாய்மை பணியாளர்கள் ஆண்கள்– 13 பெண்கள்– 2 | 15 | 2 | 30 |

சுருக்கம் ;

| வ.எண் | துணி விபரம் | அளவு | ஜீலை | மொத்தம் | ஜிஎஸ்டி தொகை | மொத்தம் வரியுடன் |
|---|---|---|---|---|---|---|
| | **காக்கி கலர் பேண்ட் துணி மற்றும் காக்கி சட்டை துணி விபரம்** | 115.90 மீட்டர் | 150 | 17385 | 869.26 | 18254.26 |
| | **சேலை** | 6 எண் | 460 | 2760 | 138 | 2898 |
| | **ரவிக்கை** | 4.80 மீட்டர் | 77 | 369.60 | 18.48 | 388.08 |
| | **தலைப்பாகை** | 30 மீட்டர் | 73 | 2190 | 109.50 | 2299.50 |
| வழங்க வேண்டிய மொத்தம் தொகை = | | | | | | 23839.84 |

ந.க.எண் 1714/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. இந்நகராட்சியில் பணியாற்றி வரும் ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2021–2022ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடைகளை கோ ஆப் டெக்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்டவாறு சீருடைகள் கொள்முதல் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.23840 தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் 31–03–2022ல் முடிவடைய இருப்பதால் 01–04–2022 முதல் 31–03–2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 31–12–2021ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் கோரிய கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன் (மதுரை) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ.20,916 தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

31–12–2021ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி வாரச் சந்தையில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.பி.வி.நடராஜன் 36/63, சிவனுப்பாண்டியவிலாஸ், ராமசாமி தெரு, | கேள்வி இல்லை |
| | | திரு.அ.சங்கர், 10/7 36ஏ, ராமசாமி தெரு, செங்கோட்டை | 5,40,000/– |
| | | திரு.செ.அங்கராஜ், 1/127, வீனஸ் தெரு, வல்லம். | 5,05,000/- |
| 2 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை | |
| 3 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை | |
| 5 | செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை | |

31–12–2021ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி வாரச் சந்தையில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.ஆ.சங்கர் கணேஷ், த/பெ.எஸ்.கே.ஆறுமுகம், 29, நீராத்திலிங்கம் தெரு, மேலூர், செங்கோட்டை | ரூ.3,75,000 |
| | | திரு.நடராஜன், 5, கொட்டாரம் ரோடு, செங்கோட்டை | ரூ.3,30,000 |
| 2 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.எல்.சுப்பிரமணியன், த/பெ.எஸ்.லட்சுமணத் தேவர் 20–A, நீராத்திலிங்கம் தெரு, செங்கோட்டை | ரூ.2,84,000 |
| | | திரு.எல்.முத்து மாரியப்பன் E.K தேவர் தெரு, செங்கோட்டை | ரூ.2,60,000 |
| 3 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. | |
| 4 | செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. | |

ந.க.எண் ; 3090/2015/அ2

அலுவலகக் குறிப்பு ;

1. செங்கோட்டை நகராட்சி வாரச் சந்தையில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த மூன்று ஆண்டு சராசரித் தொகையினை விட கூடுதலாகவும், முந்தைய ஆண்டு குத்தகைத் தொகையான ரூ.3,14,489 விட கூடுதலாகவும் திரு.ஆ.சங்கர், செங்கோட்டை என்பவரால் ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31–03–2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செங்கோட்டை நகராட் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த மூன்று ஆண்டு சராசரித் தொகையினை விட கூடுதலாகவும், முந்தைய ஆண்டு குத்தகைத் தொகையான ரூ.2,48,912 விட கூடுதலாகவும் திரு.எல்.சுப்பிரமணியன், செங்கோட்டை என்பவரால் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31–03–2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்தினை மீண்டும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

4. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ரூ.**20,916** தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் கு எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன் (மதுரை) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.145.00 இலட்சம் மதிப்பீட்டில் செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.2 காலாங்கரை மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மேற்கொள்வதற்கன ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழில் விளம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.60375/- Flame Advertising Company, Private Limited க்கு வழங்க வேண்டியுள்ளது மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.1294/2021/இ1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

15வது நிதிக்குழு மான்யம் Tied Grant 2021-2022 ம் ஆண்டுக்கென இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மான்யத்தில் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31116/2021/அமரட்-2 நாள்.05.01.2022 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | Supply and fixing of water treatment plant RO fully automatic 10,000 liter per hr.at K.C road high level reservoir | 16.00 |
| | **Total for Tied Grant** | **16.00** |

மேற்கண்ட பணியினை மேற்கண்ட திட்ட மான்யத்தில் செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

15வது நிதிக்குழு மான்யம் UnTied Grant 2021-2022 ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது நிதியில் செங்கோட்டை நகராட்சிக்கு கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31116/2021/அமரட்-2 நாள்.05.01.2022ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | Providing Paver Block Road at Pump House Road Unicode 144023S064 (Pump House Road to ndira Colony ) Ward No.23 | 10.50 |
| 2. | Flooring, Painting, Electrification Works- Improvements works to the Council Hall & Chairman Room | 9.00 |
| 3. | Preseed Tiles Pointing 13.50m Construction of compound wall, White & Colour Washing and Maintenance works to Busstand | 4.12 |
| | **Total for Tied Grant** | **23.62** |

மேற்படி பணிகளை மேற்கண்ட திட்டத்தின் கீழ் செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

<u>மன்றபொருள்</u>

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பதொசுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கையிருப்பு இல்லை. மேலும் டெங்கு தடுப்பு பணிகள் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு உபகரணங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலநன கருத்தில் கொண்டும், கீழ்காணும் பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ;

| வ.எண் | பெயர் | அளவு |
|---|---|---|
| 1 | லைசால் | 1500 லிட்டர் |
| 2 | சானிடைசர் | 10 லிட்டர் |
| 3 | டிஜிட்டல் தெர்மோ மீட்டர் | 5 எண்ணம் |
| 4 | ஹேண்ட் வாஷ் | 10 லிட்டர் |

| | | |
|---|---|---|
| 5 | பல்ஸ் ஆக்ஸிமீட்டர் | 5 எண்ணம் |
| 6 | பேஸ்  ஷீல்டு | 50 எண்ணம் |
| 7 | இரப்பர் கையுரை | 300 எண்ணம் |
| 8 | ஒரு முறை பயன்படுத்தக் கூடிய கையுரை | 2000 எண்ணம் |
| 9 | PPE Kit | 100 எண்ணம் |
| 10 | சர்ஜிகல் மாஸ்க் 3 Ply | 20,000 எண்ணம் |
| 11 | சிந்தடிக் கையுரை | 300 எண்ணம் |
| 12 | Face Mask N-95 | 100 எண்ணம் |

ந.க.எண்:268/ 2020/ எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடுவதற்கும், மேற்காணும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது**

<u>மன்றபொருள்</u>

செங்கோட்டை நகராட்சி  பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் மற்றும் தளவாட பொருட்கள் கையிருப்பு இல்லை. மேலும் டெங்கு தடுப்பு பணிகள் கொரோனா தடுப்பு பணிகள் தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் மற்றும் தளவாட பொருட்கள் சுத்தம் செய்வதற்கும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலநன கருத்தில் கொண்டும், கீழ்காணும் பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் :

| வ.எண் | பெயர் | அளவு |
|---|---|---|
| 1 | பைரித்திரம் | 80 லிட்டர் |
| 2 | டெமிபாஸ் | 40 லிட்டர் |
| 3 | சிலிண்டர் | 100 எண்ணம் |

| | | |
|---|---|---|
| 4 | Indoor Fogging Machine | 2 எண்ணம் |
| 5 | பேசில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் (BT) | 50 கிலோ |

ந.க.எண்:268/ 2020/ எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடுவதற்கும், மேற்காணும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றபொருள்**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் கையிருப்பு இல்லை. மேலும் டெங்கு தடுப்பு பணிகள் கொரோனா தடுப்பு பணிகள் தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் மற்றும் சுத்தம் செய்வதற்கும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலநன கருத்தில் கொண்டும், கீழ்காணும் பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் :

| வ.எண் | பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் | 3000 கிலோ |
| 2 | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் | 10,000 கிலோ |
| 3 | மழை கோட் | 20 எண்ணம் |
| 4 | Reflector Jocket | 100 எண்ணம் |
| 5 | கம்பூட் | 25 எண்ணம் |
| 6 | வெள்ளை பினாயில் | 100 லிட்டர் |
| 7 | கருப்பு பினாயில் | 50 லிட்டர் |
| 8 | டாய்லெட் கிளினீங் ஆசிட் | 50 லிட்டர் |

| | | |
|---|---|---|
| 9 | செருப்பு | 15 எண்ணம் |
| 10 | தென்னை ஈக்கிமார் | 50 எண்ணம் |
| 11 | மூங்கில் தூப்புமார் | 30 எண்ணம் |
| 12 | முள்கரண்டி கைப்பிடியுடன் – சிறியது | 10 எண்ணம் |
| 13 | முள்கரண்டி கைப்பிடியுடன் – பெறியது | 20 எண்ணம் |
| 14 | குப்பை அகற்றும் தகடுகள் | 50 எண்ணம் |
| 15 | மண்வெட்டி சிறியது (கைப்பிடியுடன்) | 10 எண்ணம் |
| 16 | மண்வெட்டி பெறியது (கைப்பிடியுடன்) | 10 எண்ணம் |
| 17 | நைலான் தொப்பி | 100 எண்ணம் |
| 18 | சாக்கடை கரண்டி (சிறியது) | 10 எண்ணம் |
| 19 | சாக்கடை கரண்டி (பெறியது) | 10 எண்ணம் |
| 20 | முள் கொக்கி கைப்பிடியுடன் (சிறியது) | 10 எண்ணம் |
| 21 | முள் கொக்கி கைப்பிடியுடன் (பெறியது) | 20 எண்ணம் |
| 22 | அலுமினிய கூடை | 10 எண்ணம் |
| 23 | அரிவாள் | 5 எண்ணம் |
| 24 | கடப்பாறை | 3 எண்ணம் |

ந.க.எண்:268/ 2020/ எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடுவதற்கும், மேற்காணும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதிக்கப்பட்டது**

மன்றபொருள்

15வது நிதிக்கு 2021–2022 Tied மான்யத்தில் செங்கோட்டை நகராட்சி பகுதியில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் Supply and fixing of water treatment plant RO fully automatic 10,000 liter per hr.at K.C road high level reservoir– பணி மேற்கொள்ள விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை ரூ. |
|---|---|---|
| 1. | Green India Solution for Pollution, Salem | 1331000 |
| 2. | SRI Enterprises, Sankarankovil | 1345000 |
| 3. | VST Marketing, Sankarankovil | 1400000 |

வரப்பெற்ற  விலைப்பட்டியலில் குறைவாக உள்ளதை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதிக்கப்பட்டது